பொதுத்துறை

# மானியக் கோரிக்கை எண்.38

# கொள்கை விளக்கக் குறிப்பு

2014–2015

செல்வி ஜெ ஜெயலலிதா
முதலமைச்சர்

©

தமிழ்நாடு அரசு

2014

## மானியக் கோரிக்கை எண்.38

## பொதுத்துறை

## 2014–2015 ஆம் ஆண்டுக்கான

## கொள்கை விளக்கக் குறிப்பு

பொதுத்துறை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் நேரடி கட்டுப்பாட்டிலும், மேற்பார்வையிலும் இயங்கி வருகிறது. இத்துறை, மாநிலத்தின் பொது நிர்வாகம் சம்பந்தப்பட்ட முக்கியப் பணிகளை கவனித்து வருகிறது. இத்துறையில் கையாளப்படும் மிகமுக்கியமான பணிகளாவன:-

- ❖ மேதகு ஆளுநரின் அலுவலகம் மற்றும் இல்லப்பராமரிப்பு தொடர்பான பணிகள்.
- ❖ மாண்புமிகு அமைச்சர்களின் பணி நியமனம் தொடர்பான பணிகள்.
- ❖ மாண்புமிகு முதலமைச்சர் மற்றும் அமைச்சரவை தொடர்பான பணிகள்.
- ❖ அமைச்சரவை கூட்டம் மற்றும் தொடர் நடவடிக்கைகள்.

- தகைசால் பெருமக்களின் வருகையின்போது மரபு சீர்முறையிலான ஏற்பாடுகளைச் செய்தல்.
- தேசிய ஒருமைப்பாட்டுக் குழு, பன்மாநிலக்குழு மற்றும் தென்மண்டலக் குழு உட்பட, நடுவண் மற்றும் மாநில அரசுகளுக்கு இடையேயான பொதுவான விவரங்கள் குறித்து கவனித்தல்.
- நடுவண் அரசின் வெளியுறவுத் துறை அமைச்சகம் மற்றும் அயல்நாட்டு தூதரகங்களுடன் தொடர்பு கொள்ளல்.
- சென்னை, உதகமண்டலம் மற்றும் புதுதில்லியிலுள்ள அரசு விருந்தினர் இல்லங்களை நிர்வகித்தல்.
- அரசு விமான போக்குவரத்துப் பிரிவு சம்பந்தமான பணிகளை நிர்வகித்தல் மற்றும் கவனித்தல்.
- இந்திய ஆட்சிப்பணி அலுவலர்கள் மற்றும் மாவட்ட வருவாய் அலுவலர்கள் ஆகியோர்களின் நிர்வாகப் பணிகளை கவனித்தல்.
- மாவட்ட நீதிபதிகள் மற்றும் உயர்நீதிமன்ற சட்ட அலுவலர்கள் நியமனம்.
- விசாரணை ஆணையங்கள் அமைப்பது உட்பட சட்டம்–ஒழுங்கு தொடர்பான பிரச்சினைகள்.

- ❖ மனித உரிமைகள் குறித்த விவரங்கள், மனித உரிமைகள் சட்டத்தை செயல்படுத்துதல், மாநில மனித உரிமைகள் மற்றும் தேசிய மனித உரிமைகள் ஆணையம் சம்பந்தப்பட்ட பணிகள்.
- ❖ இந்திய தரைப்படை, கப்பற்படை, விமானப்படை மற்றும் கடலோர காவல்படை ஆகிய இராணுவ அதிகாரிகளுடன் ஒத்துழைப்பு நல்குதல்.
- ❖ அயல்நாட்டவர்களை பதிவு செய்தல், உரிய நுழைவிசைவுடன் வருகின்ற அயல்நாட்டினருக்கு தமிழ்நாட்டில் தங்கும் காலத்தை நீட்டித்து அனுமதித்தல், சொந்த நாட்டிற்கு திரும்பிச் செல்ல விழைபவர்களுக்கு வெளிச்செல்ல அனுமதித்தல் (பாகிஸ்தான் மற்றும் வங்கதேச நாட்டினர் தவிர) போன்றவற்றை அயல்நாட்டினர் சட்டம் 1946–ன்படி செயல்படுத்துதல்.
- ❖ முன்னாள் படைவீரர்கள் நலன், அவர்களது குடும்ப நலன் மற்றும் முன்னாள் படைவீரர்கள் கழகத்தை நிர்வகித்தல்.
- ❖ மாநிலத்தில் வெவ்வேறு முகாம்களில் வாழும் இலங்கைத் தமிழர்களின் நலன் பேணுதல்.
- ❖ உள்நாட்டில் இடம் பெயர்ந்துள்ள இலங்கைவாழ் தமிழர்கள் சம்பந்தப்பட்டப் பணிகள்.

- ❖ சுதந்திரப் போராட்ட வீரர்கள் மற்றும் முன்னாள் இந்திய தேசிய இராணுவ வீரர்களுக்காக ஒய்வூதியம் வழங்குதல் மற்றும் நலப் பணிகளைச் செயல்படுத்துதல்.
- ❖ பொது விடுமுறை மற்றும் உள்ளூர் விடுமுறை அறிவித்தல்.
- ❖ மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் வழங்கப்படும் மனுக்களை முதலமைச்சரின் தனிப்பிரிவு மூலம் ஆய்வு செய்து தீர்வு செய்தல்.

**<u>மாநில விழாக்கள் நடத்துதல்:</u>**

2. தேசிய விழாக்களான சுதந்திரத் திருநாள் மற்றும் குடியரசுத் திருநாள் விழாக்களை மாநில அளவில் கொண்டாடுவதுடன் அவ்விழாக்கள் மாநிலம் முழுவதும் தேசப் பற்றுடன் கொண்டாடுவதையும் இத்துறை உறுதி செய்கிறது.

நடுவண் அரசால் சிறப்பு நாட்களாக அறிவிக்கப்பட்டுள்ள தியாகிகள் நாள், கொடுஞ்செயல் எதிர்ப்பு நாள், மத நல்லிணக்க நாள், ஐக்கிய நாடுகள் தினம், தேசிய அர்ப்பணிப்பு நாள் மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு நாள் ஆகிய நாட்களில் தலைமைச் செயலகத்தில் உறுதிமொழி ஏற்கவும் இத்துறை ஏற்பாடு செய்கிறது.

**<u>மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் காவல்துறை அதிகாரிகளின் வருடாந்திர மாநாடு:</u>**

**3.** மாவட்டங்களின் தேவைகளை மதிப்பீடு செய்து அவற்றின் தேவைகளை நிறைவேற்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் காவல்துறை அதிகாரிகளின் மாநாடு ஒவ்வொரு ஆண்டும் இத்துறையால் ஏற்பாடு செய்யப்படுகிறது. அரசின் நலத் திட்டங்கள் மற்றும் கொள்கைகளை ஆய்வு செய்வதற்கும், அவற்றை கண்காணிப்பதற்கும், ஏழை எளிய மக்கள் பயன்பெறும் வகையில் புதிய நலத்திட்டங்களை தீட்டுவதற்கும் இம்மாநாடு அடித்தளமாக அமைகிறது. கடந்த **11**, **12** மற்றும் **13** டிசம்பர், **2013**–ல் நடைபெற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் காவல் துறை அதிகாரிகளின் மாநாட்டில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் **312** அறிவிப்புகளை வெளியிட்டார்கள்.

**<u>விருதுகள் மற்றும் பதக்கங்கள்:</u>**

**4.** மாநில அரசின் விருதுகளான அண்ணா பதக்கம், கல்பனா சாவ்லா விருது, பெருந்தலைவர் காமராசர் விருது, கோட்டை அமீர்

விருது மற்றும் பேரறிஞர் அண்ணா விருது ஆகியவற்றிற்கு விருதாளர்களைத் தெரிவு செய்வதற்கான பணியையும் இத்துறை மேற்கொள்கிறது. மேலும், நடுவண் அரசின் பத்ம விருதுகளுக்கும், வீர தீரச் செயல்களுக்கான விருதுகளுக்கும் விண்ணப்பங்கள் பெறப்பட்டு அவற்றினை ஆய்வு செய்த பின் உரிய பரிந்துரைகளுடன் நடுவண் அரசுக்கு அனுப்பப்படுகின்றன.

**அயல்நாட்டினர் செயலாக்க விதி:**

**5.** அயல் நாட்டினர் இந்தியாவில் தங்குவதற்கு அனுமதியும் உரிய நுழைவிசைவுடன் வருகை புரியும் அயல்நாட்டினர்களுக்கு (பாகிஸ்தான் மற்றும் வங்கதேச நாட்டினர் தவிர) இந்தியாவில் தங்கும் காலத்தை நீட்டித்து அனுமதியும், இந்தியாவை விட்டு வெளிச்செல்ல விரும்புபவர்களுக்கு அனுமதியும் (Exit Permission), மற்றும் இந்தியாவை விட்டு வெளியேற்றவும்/வெளியேறக் கோரி ஆணையும் மாநில அரசால் வழங்குவதற்கு பொதுத் துறை ஒரு முகமைத் துறையாக செயல்பட்டு வருகிறது. குடிநுழைவு, விசைவு,

அயல்நாட்டினர் பதிவு மற்றும் கண்காணிக்கும் முறை (Immigration, Visa, Foreigners Registration and Tracking System) இவையாவும் மாவட்ட கண்காணிப்பாளர் அலுவலகத்தின் வாயிலாக அயல்நாட்டினர் பதிவு அலுவலகத்தில் (FROs) மின்னணு மூலமாக இத்துறையால் ஒருங்கிணைந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. வெளிநாட்டினர் தொடர்புடைய பதிவு மற்றும் அனுமதிகள் வழங்குவது போன்ற அனைத்து செயல்கள் முதற்கொண்டு மின்னணு மூலமாக செயல்படுத்தப்படுகிறது. மாநிலத்தில் உள்ள அயல்நாட்டினரின் அனைத்து நடவடிக்கைகளையும் கண்காணிப்பதற்கு இச்செயல்முறை காவல் துறையினருக்கு உதவியாக உள்ளது. இதைத் தவிர பல்வேறு நிறுவனங்களால் வழங்கப்பட்டுள்ள சான்றிதழ்களின் மீது அவற்றின் உண்மைத்தன்மை சரிபார்க்கப்பட்டபின் இத்துறையால் சான்றுறுதி செய்யப்படுகிறது.

**மாநில மரபு:**

**6.** இம் மாநிலத்திற்கு (தமிழ் நாட்டிற்கு) வருகை புரியும் மாநில விருந்தினர்கள் மிக முக்கிய மற்றும் முக்கிய பிரமுகர்கள்

ஆகியோரின் மரபு மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகள் இத்துறையால் மேற்கொள்ளப்படுகின்றன. கடந்தாண்டு நான்கு முறை இந்திய குடியரசுத் தலைவர் வருகை, மூன்று முறை இந்திய துணைக் குடியரசுத் தலைவர் வருகை மற்றும் ஒருமுறை இந்திய பிரதமர் வருகை உட்பட 1532 முக்கிய பிரமுகர்கள் தமிழ் நாட்டிற்கு வருகை புரிந்துள்ளனர். மேலும், 05.12.2013 மற்றும் 06.12.2013–ல் சென்னைக்கு வருகை புரிந்த ஜப்பானிய பேரரசர் மற்றும் பேரரசிக்கான மரபு மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகள் இத்துறையால் வெற்றிகரமாக கையாளப்பட்டது.

**<u>மனித உரிமைகள்:</u>**

7. மனித உரிமைகள் என்பது தனிநபர் சுதந்திரம், வாழ்வுரிமை, சமநிலை, சுயமரியாதை மற்றும் அரசியலமைப்பு சட்டத்தால் பாதுகாக்கப்பட்ட அனைத்து உரிமைகளையும் உள்ளடக்கியதாகும். அரசு அத்தகைய உரிமைகளை பாதுகாக்க உரிய நடவடிக்கை எடுத்து வருகிறது. அதன்படி, மனித உரிமை மீறல் தொடர்பான புகார்களை கண்காணிப்பது மற்றும் சட்டத்தில் உள்ள நடைமுறைகளின்படி

உரிமை மீறும் நபர்களின் மீது தொடர்புடைய துறைகள் மூலம் உரிய நடவடிக்கை எடுப்பதுமட்டுமின்றி பாதிக்கப்படும் நபருக்கு இழப்பீடு பெற்றுத் தரவும் இத்துறை செயல்படுகிறது. மேலும், தேசிய மனித உரிமைகள் ஆணையம் அவ்வப்போது வழங்கும் அறிவுரைகளை நிறைவேற்றி வருகிறது.

தமிழ்நாடு மாநில மனித உரிமைகள் ஆணையம், மனித உரிமைகள் பாதுகாப்பு சட்டம் 1993 பிரிவு 21–ன் கீழ் அமைக்கப்பட்டு 17.04.1997 முதல் செயல்பட்டு வருகிறது. இவ்வாணையத்தில் சட்டம், புலனாய்வு, நிர்வாகம் என மூன்று பிரிவுகள் செயல்படுகின்றன. மனித உரிமைகள் மீறப்படுவது சம்மந்தமான புகார்கள் ஆணையத்தில் எந்த மொழியிலும் தாக்கல் செய்யலாம். இதற்கு கட்டணம் எதுவும் செலுத்தத் தேவையில்லை. புகார்கள் மீது விசாரணை மேற்கொள்வது மட்டுமின்றி மற்ற தகவல்களின் அடிப்படையில் சுயமாக வழக்குகளையும் ஆணையம் விசாரணைக்கு ஏற்றுக்கொள்கிறது. விசாரணைமுடித்த பின்பு தொடர்புடைய துறைகளுக்கு ஆணையம்

அதன் பரிந்துரைகளை அனுப்புகிறது. அந்த பரிந்துரைகளை நிறைவேற்றும் பணியை இத்துறை கண்காணித்து வருகிறது.

**<u>இலங்கை தமிழ் அகதிகளுக்கான நிவாரணம் மற்றும் மறுவாழ்வு:</u>**

**8.** அகதிகள் மறுவாழ்வு மற்றும் தமிழகத்திற்கு வெளியே வாழும் தமிழர்கள் நல ஆணையரகம் தமிழகத்தின் பல்வேறு முகாம்களில் வசிக்கும் இலங்கைத் தமிழ் அகதிகளின் நலன் தொடர்பான பணிகளையும், தமிழகத்திற்கு வெளியே வாழும் தமிழர்களின் நலன் தொடர்பான பணிகளையும் மேற்கொண்டு வருகிறது. துறையில் உள்ள புள்ளி விவரங்களின்படி, இலங்கையில் **1983–**ல் ஏற்பட்ட இனக்கலவரத்திற்கு பிறகு **3,04,269** இலங்கை தமிழர்கள் அகதிகளாக தமிழ்நாட்டிற்கு வந்துள்ளனர். மாவட்ட ஆட்சித் தலைவர்களிடமிருந்து **30.04.2014** அன்று பெறப்பட்ட புள்ளி விவரங்களின்படி, **19,728** குடும்பங்களைச் சேர்ந்த **65,272** இலங்கைத் தமிழர்கள் மாநிலத்தில் **26** மாவட்டங்களில் (இரண்டு சிறப்பு முகாம்கள் உள்ளிட்ட) **112** முகாம்களில் தங்க

வைக்கப்பட்டுள்ளனர். இதைத் தவிர, 13,271 குடும்பங்களைச் சேர்ந்த 34,566 இலங்கைத் தமிழ் அகதிகள், முகாம்களுக்கு வெளியில் வசித்து வருகின்றனர். முகாம்களில் வசித்து வரும் இலங்கைத் தமிழர்களுக்கு பல்வகையான நிவாரண உதவிகள், மைய மற்றும் மாநில அரசின் வகைப்பாடு நிர்ணயங்களின்படியும் மற்றும் ஒப்புதலுடன் வழங்கப்படுகிறது.

**முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களுக்கு வழங்கப்பட்டு வரும் பல்வேறு நலத்திட்டங்கள்:**

**9.** முகாம்களில் வசித்து வரும் இலங்கைத் தமிழர்கள் கண்ணியம் மற்றும் பாதுகாப்புடன் தங்கள் வாழ்வினை மேற்கொள்ள வழிவகை செய்வதே இவ்வரசின் முனைப்பான திட்டமாகும். எனவே, மத்திய அரசு வழங்கி வரும் உதவியோடு கூடுதலாக தமிழக மக்களுக்கு வழங்கப்பட்டு வரும் அனைத்து நலத்திட்ட உதவிகளையும் முகாம் வாழ் இலங்கைத் தமிழர்களுக்கும் நீட்டித்து செயல்படுத்த இந்த அரசு கொள்கை முடிவெடுத்துள்ளது. இந்த

கொள்கை முடிவானது மேதகு ஆளுநர் உரையில் 03.06.2011 அன்று அறிவிக்கப்பட்டது.

10. இதன்படி, அகதிகளுக்கு நடைமுறையில் இருந்து வரும் திட்டங்களுக்கு வழங்கப்பட்டு வரும் நிவாரணங்கள் கணிசமான அளவு உயர்த்தப்பட்டுள்ளது. குடும்பத் தலைவருக்கு வழங்கப்பட்டு வரும் பணக்கொடையின் அளவு மாதமொன்றிற்கு ரூ.400/– லிருந்து ரூ.1000/–ஆக உயர்த்தப்பட்டுள்ளது. வயது வந்த பிற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டு வந்த மாத பணக் கொடையானது ரூ.288/–லிருந்து ரூ.750/– ஆக உயர்த்தப்பட்டு வழங்கப்படுகிறது. 12 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுக்கு ரூ.180/– மற்றும் ரூ.90/– என இரண்டு விதமாக வழங்கப்பட்டு வந்த மாத பணக்கொடை ரூ.400/– ஆக உயர்த்தப்பட்டு வழங்கப்படுகிறது. இலங்கைத் தமிழ் அகதிகள் குடும்பத்திற்கு மானிய விலையில் வழங்கப்பட்டு வந்த அரிசியில் 20 கிலோ வரை விலை ஏதுமின்றி வழங்கப்படுகிறது. இத்துடன் சர்க்கரை, கோதுமை, மைதா, ரவை போன்ற பொருட்களும்

மானிய விலையில் நியாய விலைக் கடைகள் மூலம் வழங்கப்படுகிறது. முகாம்களில் வசித்து வரும் 19,728 அகதிகள் குடும்பத்தினர் இத்திட்டத்தின் மூலம் பயனடைந்து வருகின்றனர். மேலும், 2014 பொங்கல் பண்டிகையை முன்னிட்டு மாண்புமிகு முதலமைச்சரின் பொங்கல் பரிசுத் தொகுப்பானது அனைத்து முகாம் வாழ் இலங்கைத் தமிழர் குடும்பங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது.

**11.** முகாம்களில் வசித்து வரும் அகதிகள் குடும்பத்தைச் சேர்ந்த சிறார்களின் முறையான கல்வி வளர்ச்சிக்கு, இவ்வரசு பல்வேறு சீரிய நடவடிக்கைகள் எடுத்து வருகிறது. அதன்படி, அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் படித்து வரும் இலங்கைத் தமிழ் மாணவர்களுக்கு 12–ம் வகுப்பு வரை இலவசக் கல்வி அளிக்கப்படுகிறது. இத்துடன் தமிழ் நாட்டிலுள்ள பிற மாணவர்களுக்கு வழங்கப்படுவதைப் போன்று நோட்டுப் புத்தகங்கள், பாடப் புத்தகங்கள், சீருடைகள், விலையில்லா மிதிவண்டி, கணித உபகரணங்கள் பெட்டி (Geometry box), புத்தக பை, மதிய உணவு,

இலவச பேருந்து அனுமதிச்சீட்டு மற்றும் விலையில்லா மடிக்கணினிகள் வழங்கப்படுகின்றன. நடப்பாண்டில் **22,428** இலங்கைத் தமிழ் மாணவர்கள் பல்வேறு கல்வி நிலையங்களில் கீழ்க்கண்டவாறு சேர்ந்துள்ளனர்.

| **வ. எண்.** | **நிலை** | **மாணவர்களின் எண்ணிக்கை** |
|---|---|---|
| 1. | மழலையர் பள்ளி | 2,688 |
| 2. | ஆரம்பப்பள்ளி | 8,752 |
| 3. | நடுநிலைப்பள்ளி | 4,459 |
| 4. | உயர்நிலைப்பள்ளி | 2,724 |
| 5. | மேல்நிலைப்பள்ளி | 2,251 |
| 6. | கல்லூரி | 1,554 |
| | **மொத்தம்** | **22,428** |

**12.** இத்துடன், இலங்கைத் தமிழ் மாணவர்கள் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளிலும், தொழில் சார்ந்த கல்லூரிகளிலும், தொழில் நுட்ப நிலையம் மற்றும் பல்கலைக் கழகங்களிலும் ஒற்றைச் சாளர முறையில் தகுதியின் அடிப்படையில், பொதுப்பிரிவின் கீழ்

கலந்தாய்வில் கலந்து கொண்டு, சேர்ந்து கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் மற்ற மாணவர்களைப் போல அனைத்து விதமான கல்வி உதவித்தொகை பெற தகுதியுடையவர்கள். மேலும், பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை மற்றும் தாழ்த்தப்பட்ட (ம) பழங்குடியினர் நலத்துறை விடுதிகளில், தலா ஐந்து இடங்கள் ஒதுக்கீடு செய்ய ஆணைகள் வெளியிடப்பட்டு, தகுதியுள்ள இலங்கைத் தமிழர்கள் குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்கள் தங்கி, தங்களது படிப்பினை தொடர வழிவகை செய்யப்பட்டுள்ளது.

**13.** இலங்கை அகதிகள் முகாம்களில் வசித்துவரும் மாணவர்களுக்கு அவர்கள் பயிலும் படிப்பிற்கு ஏற்ப ரூ.**850/–** முதல் ரூ.**4,700/–** வரை உயர் கல்வி தொடர கல்வி உதவித் தொகை, பின்வருமாறு வழங்கப்படுகிறது.

| வ. எண். | படிப்பின் பெயர் | ஆண்டிற்கான உதவித் தொகை ரூ. |
|---|---|---|
| 1. | இளங்கலை | 1,200/– |
| 2. | இளம் அறிவியல் | 1,250/– |
| 3. | முதுகலை | 1,330/– |
| 4. | முதுநிலை அறிவியல் | 1,650/– |
| 5. | பட்டயப்படிப்பு (தொழில்நுட்பம்) | 850/– |
| 6. | பொறியியல் | 2,750/– |
| 7. | மருத்துவம் | 4,700/– |
| 8. | கால்நடை மருத்துவம் | 1,400/– |
| 9. | சட்டம் | 860/– |
| 10. | இளம் அறிவியல் (வேளாண்மை) | 2,850/– |

இத்திட்டத்தின் கீழ் 2013–14 ஆம் ஆண்டில் 426 மாணவர்கள் கல்வி உதவித் தொகைகள் பெற தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

**14.** இலங்கைத் தமிழர்கள் வருவாய் ஈட்டும் வேலை வாய்ப்பை பெருக்கிடும் வகையில் அவர்களுக்கு அரசு திறன் மேம்பாட்டு

பயிற்சி அளித்து வருகிறது. முகாம் வாழ் இலங்கைத் தமிழர்களுக்கு தகுதியின் அடிப்படையில் ஓட்டுநர் உரிமம் வழங்க அனுமதி வழங்கப்படுகிறது. தையல் பயிற்சி பெற்ற பெண்களுக்கு, விலையில்லா தையல் இயந்திரம் வழங்கப்படுகிறது. அதன்மூலம் அவர்கள் தங்களின் வருவாயை உயர்த்திக் கொள்ள இயலும். 2013–2014–ல் இதுவரை, 1130 பெண்கள் இத்திட்டத்தின் மூலம் பயனடைந்துள்ளனர். முகாம்களில் வசிக்கும் அகதிகள் சிக்கனம் மற்றும் கடன் நடவடிக்கைகள் மூலமாக பொருளாதார மேம்பாட்டு நடவடிக்கைகளில் ஈடுபடும் வகையில் 416 மகளிர் சுய உதவிக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டு, குழு ஒன்றுக்கு ரூ.10,000/– வீதம் சுழல் நிதி ''ஒருமுறை மானியமாக'' வழங்கப்பட்டு வருகிறது.

15. மாதாந்திர பணக்கொடை மட்டுமில்லாமல், சமூக பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் முகாம்களில் தங்கியுள்ள ஆதரவற்ற விதவைப் பெண்கள், வயது முதிர்ந்தவர்கள், மாற்றுத் திறனாளிகள், கணவனால் கைவிடப்பட்ட மற்றும் மணமாகாத பெண்களுக்கு மாத

ஒய்வூதியமாக ரூ.1,000/– வழங்கப்படுகிறது. 2013–2014–ஆம் ஆண்டில் 3,929 நபர்கள் இத்திட்டத்தின் மூலம் பயனடைந்துள்ளனர். முகாம் வாழ் இலங்கைத் தமிழர் குடும்பத்தில் இறப்பு ஏதும் ஏற்படின், அவ்வாறு இறந்த நபர்களின் குடும்பங்களுக்கு இறுதி சடங்குகள் செய்திட வழங்கப்பட்டு வந்த நிதியுதவி இந்த அரசால் ரூ.2,500/–லிருந்து உயர்த்தப்பட்டு தற்போது ரூ.5,000/– ஆக வழங்கப்படுகிறது. 2013–2014–ஆம் ஆண்டில், 203 இறந்தவர்களின் குடும்பத்தினர்களுக்கு இந்த நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. இதே போன்று, விபத்தின் காரணமாக இறப்பு ஏற்படின், அவர்கள் குடும்பத்திற்கு முதலமைச்சரின் இலங்கை அகதிகள் நிவாரண நிதியிலிருந்து வழங்கப்பட்டு வரும் உதவித் தொகை ரூ.15,000/–லிருந்து ரூ.25,000/–ஆக 2012–2013–ஆம் ஆண்டிலிருந்து உயர்த்தி வழங்கப்படுகிறது.

**16.** மாநிலம் முழுவதிலும் உள்ள அகதிகள் முகாம்களில் அடிப்படை வசதிகள் மற்றும் குடிநீர் வசதிகளை மேம்படுத்தும்

பொருட்டு ரூ.25.00 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த ரூ.25.00 கோடியில் தமிழ்நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரியம் வாயிலாக குடிநீர் வசதி அமைத்து தர ரூ.4.33 கோடியும் மற்றும் பிற அடிப்படை வதிகளை மேம்படுத்த ரூ.20.66 கோடியும் அனுமதிக்கப்பட்டுள்ளது. இத்துடன் அரசாணை (நிலை) எண்.1329, பொது (மறுவாழ்வு–2)த் துறை, நாள்: 26.11.2013–ன்படி, தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள மாவட்டங்களில் உள்ள அகதிகள் முகாம்களில் தலா ரூ.1.20 இலட்சம் மதிப்பீட்டில், நீடித்து நிலைக்கும் 1,655 புதிய வீடுகள் கட்டுவதற்கு இந்த அரசு 2013 – 2014–ஆம் ஆண்டில் ரூ.19.86 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. இப்பணி ஊரக வளர்ச்சித் துறை மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

17. மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு பெண்கள் திருமண உதவித் திட்டம் மற்றும் டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதி உதவித் திட்டம் ஆகியவை இலங்கைத் தமிழர்கள் குடும்பத்தைச் சேர்ந்த தகுதி வாய்ந்த பயனாளிகளுக்கு

நீட்டிக்கப்பட்டுள்ளன. மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித்திட்டத்தின் கீழ், தகுதியுடைய பெண்களுக்கான உதவித் தொகை மற்றும் உரிய எடையுடன் கூடிய திருமாங்கல்யத்–திற்கான தங்கமும் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ், 2013–2014 ஆம் ஆண்டில் 73 மகளிர் பயனடைந்துள்ளனர். டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதி உதவித் திட்டம் மூலம் கருவுற்ற முகாம் வாழ் இலங்கைத் தமிழ் பெண்களுக்கு மகப்பேறு உதவியாக ரூ.12,000/– நிதியுதவி வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் 2013 – 2014 ஆம் ஆண்டில் 822 பெண்கள் பயனடைந்துள்ளனர். அதேபோன்று, பெண் குழந்தை பாதுகாப்பு திட்டம் இலங்கைத் தமிழர்களுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது. 2013–2014–ல் இத்திட்டத்தின் மூலம் 47 பெண் குழந்தைகள் பயனடைந்துள்ளனர்.

18. முதலமைச்சரின் புதிய விரிவான மருத்துவக் காப்பீட்டு திட்டம் முகாம் வாழ் இலங்கைத் தமிழர்களுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது. இத்திட்டமானது 2011 – 2012–ல் முகாம்களில் வசித்துவரும்

தமிழர்களுக்கும் 2013–2014–ஆம் ஆண்டிலிருந்து முகாம்களுக்கு வெளியில் வசிக்கும் இலங்கைத் தமிழர்களும் பயன் பெறும் வகையில் நீட்டிக்கப்பட்டுள்ளது.

<u>**சிறப்பு முகாம்:**</u>

**19.** தமிழகத்தில் செய்யார் (திருவண்ணாமலை மாவட்டம்) மற்றும் திருச்சி (திருச்சிராப்பள்ளி மாவட்டம்) சிறப்பு முகாம்களில் காவல்துறையின் எதிர்மறையான குறிப்புகள் கொண்ட, மாநிலத்திற்குள் சுதந்திரமாக செல்ல முடியாத இலங்கைத் தமிழர்கள் தங்கவைக்கப்பட்டுள்ளனர். 31.07.2014 நிலவரப்படி சுமார் 50 இலங்கைத் தமிழர்கள் வெளிநாட்டினர் சட்டம் 1946–பிரிவு 3(2)இ–ன் கீழ் இவ்விரண்டு சிறப்பு முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கு தினமும் ரூ.70/– வீதம் சமைத்த உணவு அளிக்கப்பட்டு வருகிறது.

**அகதிகள் தாயகம் திரும்புதல்:**

**20.** தங்கள் சொந்த விருப்பத்தின் பேரில் தாய் நாட்டிற்கு திரும்பிச் செல்ல விரும்பும் இலங்கை அகதிகளுக்கு “வெளிச்செல்” அனுமதி, தொடர்புடைய மாவட்ட ஆட்சியர்களால் வழங்கப்படுகிறது. “வெளிச்செல்” அனுமதி, விரைவாக வழங்குவதற்கு எளிய நடைமுறை உருவாக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. **2013–2014–ல் 618** நபர்கள் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் தூதரக நிதி உதவியுடன் (UNHCR) இலங்கைக்கு திரும்பியுள்ளனர்.

**வெளிநாடு வாழ் தமிழர்கள் நலன்:**

**21.** தமிழர்கள் வணிகத்தின் பொருட்டும், படையெடுப்பின் பொருட்டும் குடியமர்வின் பொருட்டும் தொன்றுதொட்டு அயல்நாடுகளுக்குச் சென்றுள்ளனர். பொருளாதார காரணங்களுக்காகவும், பொருளாதாரம் உலக மயமாக்கப்பட்டதன் காரணமாகவும், ஒவ்வொரு வருடமும் அதிக எண்ணிக்கையில் தமிழர்கள் வேலை தேடியும், வாழ்வாதாரத்திற்காகவும்

வெளிநாடுகளுக்கு இடம் பெயர்ந்து செல்கின்றனர். இவர்கள் வெளிநாடுகளில் தங்கி இருக்கும் போது, எதிர்கொள்ளும் பல்வேறு பிரச்சினைகளுக்கு தீர்வு காண அரசை அணுக வேண்டியுள்ளது. முன்னர், இது போன்ற பிரச்சனைகளுக்கு மத்திய அரசின் வெளி விவகாரத் துறை அமைச்சகம் மூலம் மட்டும் தீர்வு காண போதுமானதாக இருந்தது. இருப்பினும், ஏராளமான தமிழர்கள் வெளிநாட்டில் தங்கியுள்ளதால், குறிப்பாக குறைந்த வருவாய் பெற்று, வெளிநாட்டில் தங்கியுள்ள தமிழர்களின் உரிமைகளை மாநில அரசு பாதுகாக்க வேண்டியுள்ளது. இதன் விளைவாக, சென்னையில் உள்ள மறுவாழ்வுத் துறை ஆணையரகத்தில் வெளிநாடு வாழ் தமிழர்களின் நலன்காக்க தனியாக ஒரு பிரிவு ஏற்படுத்தப்பட்டு, இந்த ஆணையரகத்தின் பெயர் அகதிகள் மறுவாழ்வு மற்றும் தமிழகத்திற்கு வெளியே வாழும் தமிழர்கள் நல ஆணையரகம் என பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

**22.** வெளிநாடு வாழ் தமிழர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினர்கள் அதிகாரிகளை தொடர்பு கொள்ளும் பொருட்டு ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு பிரிவு தொடங்கப்பட்டுள்ளது. இதற்காக, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) ''மாவட்ட நல அலுவலர் (வெளிநாடு வாழ் தமிழர்கள்)'' ஆகவும் மற்றும் மாவட்ட தலைமை மேலாளர்(குற்றவியல்) அவர்களின் பொறுப்பின் கீழ் உள்ள பிரிவானது ''மாவட்ட நல மையம் (வெளிநாடு வாழ் தமிழர்கள்)'' ஆகவும் செயல்படும். இந்த பிரிவானது வெளிநாடு வாழ் தமிழர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினர்களிடமிருந்து வருகின்ற முறையீடுகள் மற்றும் குறைகள் தொடர்பான மனுக்களைப் பெற்று, உரிய பதிவேட்டில் பதிவு செய்து, தொடர் நடவடிக்கை எடுத்து வருகிறது. மேலும், வெளி நாடுகளில் வேலை தேடிச் செல்லும் தமிழர்கள் தொடர்பான விளம்பரங்களை முறைப்படுத்துவது தொடர்பாகவும், பதிவு செய்யப்படாத முகவர்கள் மீது குற்றவியல் நடவடிக்கைகள் தொடரவும் மாவட்ட ஆட்சியர்களுக்கு உரிய அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

<u>நிதி நிலை:</u>

23. 2013–2014 மற்றும் 2014–2015– ஆம் நிதி ஆண்டிற்கு கீழ்க்கண்டவாறு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(ரூபாய் இலட்சத்தில்)

| வ..எண். | திட்டம் (கணக்குத் தலைப்பு) | வரவு–செலவு மதிப்பீடு 2013 – 2014 | திருத்திய மதிப்பீடு 2013–2014 | இறுதி திருத்திய மதிப்பீடு 2013–2014 | வரவு–செலவு மதிப்பீடு 2014 – 2015 |
|---|---|---|---|---|---|
| 1. | 2235–01–105–I-AA- துயர்தணிப்பு நடவடிக்கைகள் | 7.56 | 3.63 | 3.63 | 4.01 |
| 2. | 2235–01–105–I-AC- தாயகம் திரும்பியோர் துயர்தணிப்பு நடவடிக்கைகள் | 9468.27 | 11836.61 | 11858.77 | 10364.02 |
| 3. | 2235–01–800–I-AH- வெளிநாடுவாழ் தமிழர்கள் நலன் | 14.79 | 6.18 | 6.18 | 6.42 |
| 4. | 4235–01–105–II-JW- அகதிகள் முகாமில் வீடுகள் கட்டுதல் | 1500.00 | 1500.00 | 1500.00 | 0.01 |

**<u>முன்னாள் படைவீரர்கள் நலன்:</u>**

**24.** நாட்டிற்கு சேவை செய்ய இளைய ஆண்கள் மற்றும் பெண்களை இந்திய இராணுவப் படைக்கு அனுப்பி வைப்பதில் தமிழ்நாடு உன்னதமான மரபை கொண்டுள்ளது. இப்படை வீரர்கள் மிகுந்த அர்ப்பணிப்புடன் பணியாற்றுவதற்கு ஏதுவாக, அவர்கள் குடும்பத்தினருடன் இல்லாதபோது அவர்களுடைய குடும்பங்களை காப்பதும், மேலும் அவர்கள் அமைதியாகவும், ஆக்கபூர்வமாகவும் ஓய்வு காலத்தை கழிப்பதற்கு வழிவகை செய்வது இன்றியமையாததாகும். இவ்விரு நோக்கங்களையும் நிறைவேற்ற முன்னாள் படைவீரர் நல இயக்ககம் 1974–ல் ஏற்படுத்தப்பட்டு பாடுபட்டு வருகிறது.

**25.** முன்னாள் படைவீரர் நல இயக்ககம், முன்னாள் படைவீரர்கள், படைப்பணி புரிவோர் மற்றும் படைப்பணியில் இறந்தோர் ஆகியோரின் குடும்பத்தினரின் நலனை மேம்படுத்திடும் பொருட்டு கொள்கைகளையும், திட்டங்களையும் வகுத்துள்ளது.

ஒவ்வொரு ஆண்டும், ஏறக்குறைய தமிழ்நாட்டைச் சேர்ந்த 1400 படைவீரர்கள் படைப்பணியில் இருந்து ஓய்வு பெறுகின்றனர். 31.03.2014 அன்றைய நிலவரப்படி, முன்னாள் படைவீரர் நலத் துறையில் 2,28,676 முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்களின் கைம்பெண்கள் பதிந்துள்ளனர். இவ்வியக்ககம் 29 மாவட்ட அலுவலகங்கள் மூலம் இவர்களின் தேவைகளையும், கோரிக்கைகளையும் நிறைவு செய்கிறது. முன்னாள் படைவீரர் நலத்துறை அதனுடைய திட்டங்களுக்கான செலவினத்திற்கு கொடிநாள் நிதி திரட்டும் திட்டத்தின் கீழ் நிதியினை திரட்டுகிறது.

**26.** முன்னாள் படைவீரர் நல இயக்ககத்தின் தலையாய திட்டங்களை கீழ்வருமாறு ஐந்து முக்கிய பிரிவுகளாக வகைப்படுத்தலாம்:

1. நிதியுதவிகள் / மானியங்கள்.
2. மறு வேலை வாய்ப்புகளை உருவாக்குதல்.
3. திறன் மேம்படுத்துதல் மற்றும் பயிற்சி.
4. கல்வி நிலையங்களில் முன்னாள் படைவீரர்களின் குழந்தைகளுக்கான இட ஒதுக்கீடுகள்.
5. சுய வேலை வாய்ப்பு திட்டங்கள்.

**<u>நிதி உதவிகள் / மானியங்கள்:</u>**

தமிழ்நாடு முன்னாள் படைவீரர் நல நிதி மற்றும் தொகுப்பு நிதி மூலமாக முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தோர்களுக்கு பல்வேறு வகை நிதியுதவிகள் வழங்கப்பட்டு வருகிறது.

***<u>தமிழ்நாடு முன்னாள் படைவீரர் நல நிதி:</u>***

**27.** ஆயுட்கால மாதாந்திர நிதியுதவி, முதியோர் ஓய்வூதியம், பல்வேறு வகையிலான மருத்துவ நிதியுதவி, முன்னாள் படைவீரர்களின் மகள்களுக்கு திருமண நிதியுதவி, ஈமச்சடங்கு நிதியுதவி மற்றும் இயற்கைச் சீற்றங்கள் நிதியுதவி போன்ற நிதியுதவிகள் தமிழ்நாடு முன்னாள் படைவீரர் நல நிதியிலிருந்து வழங்கப்பட்டு வருகிறது. **2013–2014–**ஆம் ஆண்டில், **10,823** முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தோர்களுக்கு தொகை ரூ.**19,19,55,245/–** வழங்கப்பட்டுள்ளது. **2013–2014**-ஆம் ஆண்டில்

இரண்டாம் உலகப் போர் படைவீரர்கள் மற்றும் அவர்தம் கைம்பெண்களுக்கு வழங்கப்படும் ஆயுட்கால மாதாந்திர நிதியுதவி முறையே, ரூ.2,000/–லிருந்து ரூ.3,000/–ஆகவும், ரூ.1,500/–லிருந்து ரூ.2,000/–ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது. இதர மானியங்களின் கீழ் உள்ள நிதியுதவிகளின் அளவுகோல் கீழே பட்டியலிடப்பட்டுள்ளன:-

| வ. எண். | நிதியுதவியின் பெயர் | உயர்த்தப்பட்ட தொகை மாதந்தோறும் ரூபாயில் |
|---|---|---|
| 1. | வறியவருக்கான ஆயுட்கால மானியம் | 1,000/– |
| 2. | முதியோர் ஓய்வூதியம் | 1,000/– |
| 3. | கண்பார்வையற்றோருக்கான நிதியுதவி | 1,000/– |
| 4. | தொழுநோய் மானியம் | 1,000/– |
| 5. | பக்கவாதத்திற்கான மானியம் | 1,000/– |
| 6. | மாதாந்திர நிதியுதவி – வறியநிலையில் உள்ள முன்னாள் படைவீரர்களுக்கு | 1,000/– |

| | | |
|---|---|---|
| 7. | மாதாந்திர நிதியுதவி – வறியநிலையில் உள்ள கைம்பெண்களுக்கு | 1,000/– |
| 8. | காசநோய் மானியம் | 1,000/– |
| 9. | பக்கவாத மானியம் (முன்னாள் படைவீரர்கள் குழந்தைகளுக்கு) | 1,000/– |
| 10. | கண்பார்வையற்றோர் மானியம் (முன்னாள் படைவீரர்கள் குழந்தைகளுக்கு) | 1,000/– |
| 11. | மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கான மானியம் (முன்னாள் படைவீரர்கள் குழந்தைகளுக்கு) | 1,000/– |
| 12. | புற்றுநோய் நிவாரண நிதியுதவி | 1,000/– |
| | **<u>இதர உதவிகள்</u>** | |
| 13. | திருமண மானியம் | 10,000/– |
| 14. | ஈமச்சடங்கு மானியம் | 5,000/– |
| 15. | தொழுநோயால் பாதிக்கப்பட்ட முன்னாள் படைவீரர்கள் / கைம்பெண்களுக்கு ஆண்டுதோறும் தீபாவளிப் பண்டிகைக்கு வழங்கப்படும் பரிசுத் தொகை | ரூ.1,000/–க்கு மிகாமல் |

கூடுதலாக, செயற்கை உபகரணங்கள், பல்செட், மூக்கு கண்ணாடி, காது கேட்கும் கருவி தேவைப்படும் முன்னாள் படைவீரர்கள் / கைம்பெண்களுக்கு இந்நல நிதியிலிருந்து வழங்கப்படுகிறது.

***<u>தொகுப்பு நிதி:</u>***

படைப்பணியில் உயிரிழந்தோரின் வாரிசுகளுக்கும், படைப்பணியில் ஊனமுற்றோருக்கும் வழங்கப்படும் பல்வேறு வகையான மானியங்கள் இத்தலைப்பின்கீழுள்ள நிதியிலிருந்து பயன்படுத்தப்படுகிறது. இம்மானிய அளவுகோலானது 2012–2013–ல் கீழ்வருமாறு உயர்த்தப்பட்டுள்ளது :-

| வ. எண். | நிதியுதவியின் வகை | தற்போதுள்ள தொகை ரூ. | உயர்த்தப்பட்ட தொகை ரூ. |
|---|---|---|---|
| 1. | கருணைத் தொகை – போர் கைம்பெண்கள்/ சார்ந்தோர்கள் | 30,000/– | 50,000/– |
| 2. | வருடாந்திர பராமரிப்பு மானியம் | 2,000/– | 12,000/– |
| 3. | திருமண மானியம் | 10,000/– | 25,000/– |
| 4. | வீடு கட்ட மானியம் | 30,000/– | 50,000/– |

அதுமட்டுமல்லாது, இந்நிதியிலிருந்து பெறப்படும் வருமானம் முன்னாள் படைவீரர்களின் சிறார்களுக்கான கல்வி உதவித் தொகைகள் வழங்குவதற்காகவும், மேலும், சுயவேலைவாய்ப்பு திட்டங்களுக்கான வட்டி மானியங்களுக்கும் பயன்படுத்தப்படுகிறது. முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தோர்களுக்கு தொழில்நுட்பம் / வணிக / தொழிற்கல்விகளுக்கான உதவித் தொகை ஆண்டொன்றிற்கு ரூ.7,000/–த்திலிருந்து ரூ.10,000/–ஆக உயர்த்தப்பட்டுள்ளது. 2013–2014–ம் ஆண்டில் 5,538 முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தோர்களுக்கு தொகுப்பு நிதியிலிருந்து ரூ.4,69,97,513/– வழங்கப்பட்டுள்ளது.

**போர்ப் பணி ஊக்க மானியம் / வீரதீர செயல்கள், பதக்கம் பெற்றோருக்கான பணமுடிப்பு :**

**28.** வீரதீர செயல்களுக்கான வீர பதக்கங்கள், போற்றத்தக்க பணிபுரிந்தமைக்கான பதக்கங்கள் பெறுவோருக்கு வரவு செலவு நிதியொதுக்கத்தின்கீழ் அரசு நிதியிலிருந்து பணமுடிப்பு வழங்கப்படுகிறது. அரசாணை (நிலை) எண்.1012,

பொது (இராணுவம்)த் துறை, நாள்: **24.10.2011** மூலம் இப்பணமுடிப்புகளை அரசு கீழ்க்கண்டவாறு உயர்த்தியுள்ளது:-

| வ. எண். | விருது பெயர் | நடைமுறையில் உள்ளது (Existing) | | பணமுடிப்பு மற்றும் நிலத்திற்கு பதிலாக பணமுடிப்பு தொகையினை சேர்த்து ஒட்டுமொத்தமாக உயர்த்தப்பட்ட தொகை (ரூபாய்) |
|---|---|---|---|---|
| | வீரதீர செயல் களுக்கான விருதுகள் | பணமுடிப்பு (ரூபாய்) | நிலத்திற்கு பதிலாக பணமுடிப்பு (ரூபாய்) | |
| 1. | பரம்வீர் சக்ரா | 22,500 | 1,50,000 | 15,00,000 |
| 2. | அசோக் சக்ரா | 20,000 | 1,25,000 | 12,00,000 |
| 3. | மகாவீர் சக்ரா | 15,000 | 1,00,000 | 10,00,000 |
| 4. | கீர்த்தி சக்ரா | 12,000 | 75,000 | 8,00,000 |
| 5. | வீர் சக்ரா | 7,000 | 50,000 | 7,50,000 |
| 6. | சௌரிய சக்ரா | 5,000 | 40,000 | 5,00,000 |
| 6A | சேனா / நாவோ / வாயு சேனா பதக்கம் (வீரவிருதுகள்) | -- | -- | 50,000 |
| 7. | மென்சன்–இன்–டெஸ்பேட்ச்சஸ் | 2,000 | -- | 10,000 |

**<u>போற்றத்தக்க சேவைப் பதக்கங்கள் :</u>**

| வ. எண். | விருது பெயர் | நடைமுறையில் உள்ள பணமுடிப்பு (ரூபாய்) | உயர்த்தப்பட்ட பணமுடிப்பு (ரூபாய்) |
|---|---|---|---|
| 1. | பரம் விஷிஷ்ட் சேவா பதக்கம் | 15,000 | 50,000 |
| 2. | சர்வோத்தம் யுத் சேவா பதக்கம் (OPS) | 17,000 | 50,000 |
| 3. | உத்தம் யுத் சேவா பதக்கம் (OPS) | 10,000 | 25,000 |
| 4. | அதி விஷிஷ்ட் சேவா பதக்கம் | 7,000 | 25,000 |
| 5. | யுத் சேவா பதக்கம் (OPS) | 4,000 | 15,000 |
| 6. | விஷிஷ்ட் சேவா பதக்கம் | 3,000 | 15,000 |
| 7. | சேனா பதக்கம் | 3,000 | 15,000 |

2013–2014– ஆம் ஆண்டில், வீர பதக்கம் மற்றும் போற்றத்தக்க பணிக்காக பதக்கம் பெற்ற 137 நபர்களுக்கு ரூ.4,31,000/– வழங்கப்பட்டுள்ளது. மேலும், வீர விருது பெற்ற 20 நபர்களுக்கு ஆண்டு உதவி தொகையாக ரூ.7,650/– வழங்கப்பட்டுள்ளது.

**29.** தனது மகன் / மகளை படைப்பணிக்கு அனுப்பிய பெற்றோர்களின் தியாகத்தை போற்றும் வகையில், தனது ஒரே மகனை / மகளை படைப்பணிக்கு அனுப்பிய பெற்றோருக்கு வருடம் ஒன்றுக்கு ரூ.750/–ம், மேலும், ஒன்றுக்கும் மேற்பட்ட மகன் / மகளை படைப்பணிக்கு அனுப்பிய பெற்றோருக்கு வருடம் ஒன்றுக்கு ரூ.1,000/–ஆம் வழங்கப்படுகிறது. 2013–2014–ஆம் ஆண்டில், 1113 பெற்றோர்களுக்கு ரூ.10,14,500/– போர்ப்பணி ஊக்க மானியமாக தமிழக அரசு நிதியிலிருந்து வழங்கப்பட்டுள்ளது.

**<u>போரில் உயிர்நீத்த / காயமடைந்தோருக்கான கருணைத் தொகை :</u>**

**30.** போரில் மற்றும் சிவில் நிர்வாகத்திற்கு உதவிடும் நடவடிக்கையின் போது உயிரிழந்த / ஊனமுற்ற படைவீரர்களின் மிக உன்னத தியாகத்தை போற்றும் வகையில், அவர்களை சார்ந்தோர்களுக்கு ரூ.10.00 இலட்சம் வரை கருணைத் தொகையாக தமிழக அரசினால் வழங்கப்படுகிறது. இது அவர்தம் குடும்பத்தினரின் துயர் தணிப்பதை நோக்கமாகவும் கொண்டது.

2013–2014– ஆம் ஆண்டில், இதனடிப்படையில் 22 நபர்களுக்கு ரூ.12,01,000/– மானியமாக வழங்கப்பட்டுள்ளது. இவ்வகையில் வீரமரணம் எய்திய தமிழ்நாட்டைச் சார்ந்த மூன்று படைவீரர்களின் வாரிசுதாரர்களுக்கு ரூ.25.00 இலட்சம் கார்கில் நிவாரண நிதியிலிருந்து வழங்கப்பட்டுள்ளது. அரசாணை (நிலை) எண்.1278, பொது (இராணுவம்)த் துறை, நாள் 07.11.2013–ன்படி பணிகளின் போது உயிர்நீத்த / ஊனமுற்ற படைவீரர்களுக்கும், எல்லைப் பாதுகாப்பு படைவீரர்களுக்கும் வழங்கப்படும் கருணைத் தொகையினை போலவே மத்திய துணை இராணுவப் படைவீரர்களுக்கும் (CPMF) கருணைத் தொகை நீட்டிக்கப்பட்டுள்ளது.

**<u>மறு வேலை வாய்ப்பு உருவாக்குதல் :</u>**

**31.** முன்னாள் படைவீரர்கள் பெரும்பாலும் அவர்தம் இளம்பிராயத்தில் செயல்திறனுடைய பாதுகாப்பு பணிக்காலத்தினை பல ஆண்டுகள் மீதமாகக் கொண்டு படைப்பணியிலிருந்து விலகுவதால், அவர்களுக்கு மறு வேலை வாய்ப்பு அளிக்கும்

பொருட்டு, தமிழக அரசு மற்றும் அரசு சார்ந்த துறைகளில் கீழ்வருமாறு இட ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளன:–

| | | |
|---|---|---|
| 1. | பிரிவு “சி” காலிப் பணியிடங்கள் | 5% |
| 2. | அரசு மற்றும் அரசு சார்ந்த நிறுவனங்களில் அடிப்படைப் பணியாளர்கள் காலிப் பணியிடங்கள் | 10% |
| 3. | வனக்காவலர் காலிப் பணியிடங்கள் | 10% |
| 4. | வனப்பாதுகாவலர் காலிப் பணியிடங்கள் | 5% |
| 5. | தேசிய மாணவர் படை அலுவலகங்களில் லஸ்கர், ஓட்டுநர் மற்றும் இரவு காவலர்கள் காலிப் பணியிடங்கள் | 25% |
| 6. | சீருடைப் பணிப் பிரிவில் பிரிவு “சி” காலிப் பணியிடங்கள் | 5% |
| 7. | கால்நடை ஆய்வாளர் | 5% |

முன்னாள் படைவீரருக்காக ஒதுக்கப்பட்ட பணியிடங்களுக்கு பரிந்துரை செய்யும் கூட்டு பரிந்துரை அதிகாரத்தை, முன்னாள் படைவீரர் நலத் துறைக்கு தமிழ் நாடு அரசு வழங்கியுள்ளது. **2013–2014–**ல், அரசு / அரசு சார்ந்த நிறுவனங்களில் **591** முன்னாள்

படைவீரர்கள் (குரூப் ‘சி’ பிரிவில் 238 நபர்களும், குரூப் ‘டி’ பிரிவில் 353 நபர்களும்) பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

**<u>கோயில் பாதுகாப்புப் படை:</u>**

32. தமிழக கோயில்களிலுள்ள சிலைகள், நகைகள், உண்டியல் சேகரிப்புகள் மற்றும் விலையுயர்ந்த பொருட்களைப் பாதுகாப்பதற்காக கோயில் பாதுகாப்புப் படை 1992–ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. கோயில் பாதுகாப்புப் படையில் சிறப்பு காவல் அலுவலர்களாகப் பணிபுரிய முன்னாள் படைவீரர்களுக்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதில் பணிபுரியும் முன்னாள் படைவீரர்களுக்கு மாதந்தோறும் வழங்கப்படும் தொகுப்பூதியம் ரூ.1,500/–லிருந்து ரூ.5,000/–ஆக உயர்த்தப் பட்டுள்ளது. 2013–2014–ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் மூலம் 1,545 முன்னாள் படைவீரர்கள் பயன்பெற்றுள்ளனர்.

**கருணை அடிப்படையில் வேலை வாய்ப்பு :**

**33.** படைப் பணியில் உயிர்நீத்தோர் மற்றும் பணியின் போது இறந்தவர்களின் வாரிசுகளுக்கு கருணை அடிப்படையில் வேலை வாய்ப்பு வழங்கப்படுகிறது. 2012–ஆம் ஆண்டு நிலுவையிலிருந்த விண்ணப்பங்களை சிறப்பு நேர்வாக பரிசீலித்து, தீர்வு செய்யும் பொருட்டு மாவட்ட ஆட்சித் தலைவர்களை முகமை அலுவலர்களாக இந்த அரசு நியமனம் செய்தது. 2012 முதல் 2014 வரை பணியின் போது உயிரிழந்தோரின் 106 வாரிசுகளுக்கு கருணை அடிப்படையில் வேலைவாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

இராணுவ ஆட்சேர்ப்பிற்கான எண்ணிக்கையினை மேம்படுத்து–வதற்கான பயிற்சி :

**34.** தமிழ்நாட்டைச் சேர்ந்த ஆர்வமுள்ள இளைஞர்கள் இராணுவத்தில் சேருவதற்கான வாய்ப்பை மேம்படுத்தும் பொருட்டு உரிய பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. அவ்வாறான பயிற்சி

தூத்துக்குடி, திருச்சிராப்பள்ளி, திருவண்ணாமலை, திருநெல்வேலி, சிவகங்கை மற்றும் கோயம்புத்தூரில் வழங்கப்பட்டு வருகிறது. **2012–2013**–ல், **79** விண்ணப்பதாரர்களுக்கு ரூ.**63,890/–** அரசு நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளப்பட்டு இப்பயிற்சி வழங்கப்பட்டது. அதே போன்று, **2013–2014**–ல் **137** விண்ணப்பதாரர்களுக்கு ரூ.**79,348/–** செலவினத்தில் இப்பயிற்சி வழங்கப்பட்டது.

**கல்வி நிலையங்களில் இட ஒதுக்கீடு :**

**35.** முன்னாள் படைவீரர்களின் சிறார்களுக்கு பொறியியல், மருத்துவம், பல்மருத்துவம், இளங்கலை (செவிலியர்), சட்டப்படிப்பு, பட்டதாரி ஆசிரியர் படிப்பு, தொழில்நுட்பப் பட்டயக் கல்வி, தொழிற்பயிற்சி போன்ற பல்வேறு படிப்புகளுக்காக கல்வி நிலையங்களில் இடஒதுக்கீடுகள் வழங்கப்படுகிறது. இது முன்னாள் படைவீரர்கள் மத்தியில் மிகவும் பிரபலமடைந்துள்ளது.

**<u>சுய வேலை வாய்ப்புத் திட்டங்கள் :</u>**

**36.** முன்னாள் படைவீரர்களும் தொழில் முனைவோர்களாக ஆவதற்கும், மேலும் சுய வேலைவாய்ப்பு துவங்கவும் ஊக்குவிக்கப்படுகிறது. இதற்காக தேவையான நிதி வங்கிகளிலிருந்து ஏற்பாடு செய்யப்பட்டு, மேலும், ரூ.5.00 இலட்சம் வரையிலான கடன்களுக்கு 75% வட்டி மானியமும், அதேபோன்று சுய உதவிக் குழுக்களால் பெறப்படும் ரூ.7.50 இலட்சம் வரையிலான கடன்களுக்கு 100% வட்டி மானியமும் வழங்கப்படுகிறது. 2013–2014–ல், இத்திட்டத்தின் மூலம் 293 முன்னாள் படைவீரர்கள் மற்றும் 8 சுய உதவிக் குழுக்கள் சுயமாக தொழில் தொடங்கி ரூ.20,04,710/–வரை வட்டி மானியமாகப் பெற்றுள்ளனர்.

**<u>மின் ஆளுமை :</u>**

**37.** அடையாள அட்டை வழங்குவதற்கு இணையதளம் மூலம் பதிவு செய்யவும், பல்வேறு வகையான உதவிகளைப் பெற

விண்ணப்பிப்பதற்கான தகவல்களை அளிக்கவும், மேலும் விழிப்புணர்வு ஏற்படுத்தவும் மற்றும் முன்னாள் படைவீரர்களுக்கும், இயக்குநரகத்திற்கும் இடையேயும் மாபெரும் தொடர்பை ஏற்படுத்திடவும், இத்திட்டத்தின் கீழ் உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் தற்பொழுது நடைமுறையில் இருந்து வருகிறது.

**<u>தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் கழகம் (டெக்ஸ்கோ):</u>**

**38.** தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் கழகம் (டெக்ஸ்கோ) தமிழ்நாட்டைச் சேர்ந்த முன்னாள் படைவீரர்களின் சமூக மற்றும் பொருளாதார மேம்பாட்டிற்கு பல்வேறு நலத்திட்டங்களை வகுத்து செயல்படுத்திடவும், மேலும் அவர்களுக்கு வேலைவாய்ப்பு ஏற்படுத்திடவும் **1986–**ஆம் ஆண்டு நிறுவப்பட்டது.

தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் கழகத்தின் அடிப்படை செயல்பாடு ஒரு மனித வள முகமையாகும். முன்னாள் படைவீரர் நல இயக்ககத்தில் பதிவுசெய்த முன்னாள் படைவீரர்கள் தொகுப்பிலிருந்து பல்வேறு துறைகள், நிறுவனங்கள், ஏனைய சேவை

கோரும் முகமைகளுக்கு பாதுகாவலர்கள், ஓட்டுநர்கள், எழுத்தர்கள், தொலைபேசி இயக்குபவர்கள், சுற்றுலாக் காவலர்கள், செவிலியர் உதவியாளர்கள், தீ அணைக்கும் பணியாளர்கள், துப்பாக்கி ஏந்திய பாதுகாவலர்கள், ஆசிரியர்கள், காப்பாளர்கள் போன்ற பணிகளுக்கு பணியாளர்களை வழங்கி வருகிறது. **31.03.2014–**ன்படி மாநிலத்தின் பல்வேறு இடங்களில் **9999** முன்னாள் படைவீரர்கள் பணியமர்த்தப்பட்டு, அதன் முக்கிய வாடிக்கைதாரர்களாக இந்திய எண்ணெய்க் கழகம், தமிழ்நாடு உணவுப் பொருள் வழங்கும் கழகம், தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் மின்பகிர்மான கழகம் (TANGEDCO) மற்றும் பல்வேறு துறைகள் இருந்து வருகின்றன. தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் கழகம், சென்னை மாநகராட்சிக்காக, இலாபத்தினை பகிர்ந்துகொள்ளும் அடிப்படையில், வாகனங்களை நிறுத்துவதற்கு கட்டணம் வசூலிக்கும் தலங்களில் பகுதிப் பணியினை மேற்கொண்டு வருகிறது.

**39.** மின்திருட்டைக் குறைக்கும் வகையிலும், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மின்பகிர்மான கழகத்தின் (TANGEDCO) வருவாயைப் பெருக்கிடும் வகையிலும், மேலும், வேலை வாய்ப்புகளை அதிகரிக்கும் பொருட்டும், "மின்திருட்டு தடுப்புப் படைகள்" முன்னாள் படைவீரர்களைக் கொண்டு உருவாக்கப்பட்டது. இதுவரை, **200** முன்னாள் படைவீரர்களை கொண்ட **40** குழுக்கள் அமைக்கப்பட்டு, பணியமர்த்தப்பட்டு, அவர்களின் பணிகள் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மின்பகிர்மான கழகத்தின் (TANGEDCO) பாராட்டை பெற்றுள்ளது.

**40.** தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் கழக பணியாளர்களுக்கு பல்வேறு துறைகளில் திறன் மேம்பாட்டு பயிற்சியினை தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் கழகம் ஏற்பாடு செய்து வருகிறது. முன்னாள் படைவீரர்களுக்கு அவ்வாறான பயிற்சியினை துவங்க திட்டமிடப்பட்டுள்ளது. அதன்மூலம் அவர்கள்

ஊதியத்துடன் கூடிய வேலைவாய்ப்பு பெறவும், மேலும் அவர்கள் மிகவும் பயனுள்ள வகையில் அத்துறையில் பணியாற்றவும் இயலும்.

தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் கழகத்தின் கடந்த ஐந்து ஆண்டுகளின் செயல்திறன் அறிக்கை கீழ்வருமாறு :

| நிதி ஆண்டு | பணியமர்த்தப்பட்டோர் எண்ணிக்கை | வருவாய் (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 2009 – 2010 | 7730 | 7128 |
| 2010 – 2011 | 8165 | 7738 |
| 2011 – 2012 | 9200 | 9144 |
| 2012 – 2013 | 9391 | 9838 |
| 2013 – 2014 | 9999 | 10399 |

**முதலமைச்சரின் தனிப்பிரிவு:**

**41.** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு பொதுமக்கள் அனுப்பும் மனுக்களின் மீதான குறைகளை விரைந்து களைவதை உறுதி செய்யும் பொருட்டு முதலமைச்சரின் தனிப்பிரிவு அமைக்கப்பட்டுள்ளது. இது, ஏழை எளிய மற்றும் அனைத்து

தரப்பட்ட மக்கள் கண்ணியமான வாழ்வை வாழ்வதற்கு வழிகாட்டுகிற வகையில் அவர்களுக்கு, தேவையான உதவியை நல்குதல் என்ற மாண்புமிகு முதலமைச்சரின் தொலைநோக்கு திட்டத்திற்கு இயைந்தவாறு, பொதுமக்களின் சேவையில் தரம், திறன், நேர்மை, பயனுடைமை ஆகியவற்றை நிலை நாட்டும் வகையில் நிகரற்ற முறையில் செயலாற்றி வருகிறது. முதலமைச்சரின் தனிப்பிரிவு, பொது மக்களின் குறைகளை தீர்க்கும் விதமாக விரைவான, நியாயமான நிவாரணம் வழங்கி செயல்பட்டு வருகிறது.

**42.** முதலமைச்சரின் தனிப்பிரிவு, ஒரு முன்னோடி குறை தீர்வு மையமாகத் திகழ்ந்து வருகிறது. குறை தீர்க்கும் அமைப்பை மேலும் செம்மையுறச் செய்வதற்காக, பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| (அ) | புகார்களுக்கு உரிய காலத்தில் ஒப்புகையளித்தல்; |
| (ஆ) | புகார்களை மிகுந்த கவனத்துடன் ஆய்வு செய்தல்; |
| (இ) | மனுதாரர்களிடமிருந்து தகவலைப் பெறுதல்; |

| | |
|---|---|
| (ஈ) | முதுநிலை அதிகாரி நிலையில் புகார்கள் மீது முடிவெடுத்தல்; |
| (உ) | புகார் அளித்தவருக்கு ஆய்வுக்குப் பின்னர் உரிய பதிலை அளித்தல்; மற்றும் |
| (ஊ) | தெரிவு செய்யப்பட்ட சில மனுதாரர்களுடன், அவர்களுடைய குறைகளைத் தீர்வு செய்வதற்காக கலந்துரையாடி நடவடிக்கை மேற்கொள்ளுதல். |

புகார்களுக்கு நிவாரணம் அளிப்பதை விரைவுபடுத்துவதற்காக, வழக்கமான தகவல் தொடர்பு முறையை தவிர்த்து, மாநில அரசின் கீழ் உள்ள தகுதி வாய்ந்த உரிய அதிகாரியுடன் நேரடியாகத் தொடர்பு கொள்ள தனிப்பிரிவிற்கு பொறுப்பு வகிக்கிற தனி அதிகாரிக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது.

**43.** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சுற்றுப்பயணத்தின் போது அல்லது தலைமைச் செயலகத்தில் பெறப்படுகின்ற மனுக்களை அதன் தன்மையின் அடிப்படையில் வகைப்படுத்தப்படுகின்றன. மனுக்கள் குறியீடு செய்யப்பட்டு, அவற்றுக்கு நிவாரணம் வழங்குவதற்காக, அந்தந்த தலைமைச் செயலகத் துறைகள்/ துறைத் தலைவர்கள் / மாவட்ட ஆட்சியர்கள் /

காவல் துறை அதிகாரிகளுக்கு அனுப்பப்படுகின்றன. இந்த ஏற்பாட்டுமுறை முழுவதும் கணினிமயமாக்கப்பட்டு, பதில்கள், வலைதளம் (online) கண்காணிப்பு ஏற்பாட்டு முறையில் பதிவு செய்யப்படுகின்றன. நிலுவைகளின் காலஅளவு, நிலுவைக்கான காரணம், தீர்வு தன்மை மற்றும் தரம் ஆகியவற்றை மதிப்பிடுவதற்கும், இந்த ஏற்பாட்டு முறையினை தொடர்ச்சியாக கண்காணித்து அதன் பலன்களை மதிப்பிடுவதற்கும், துறைகளின் ஒருங்கிணைப்பு அதிகாரிகளுடன் குறித்த கால இடைவெளிகளில் ஆய்வுக் கூட்டங்கள் நடத்தப்படுகின்றன. வரையறுக்கப்பட்ட கால அளவுக்குள் புகார்கள் / குறைகள் மீது உடனுக்குடன் நடவடிக்கை எடுக்கப்படுவதை உறுதி செய்யும் நோக்கிலும், துறைகள் மற்றும் மாவட்டங்களின் ஒருங்கிணைப்பு அதிகாரிகள் அனைவருக்கும் அவ்வப்போது உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு புகார் மீது எடுக்கப்படும் நடவடிக்கையை ஆய்வு செய்வது ஒவ்வொரு துறையின் / மாவட்டத்தின் ஒருங்கிணைப்பு அதிகாரியின் பொறுப்பாகும். முதலமைச்சரின் தனிப்பிரிவானது, ஏதேனும்

தவறுகள் ஏற்பட்டிருப்பின் அவற்றை கண்டறிந்து சரி செய்வதற்கான நடவடிக்கை எடுப்பதற்காக, மாதிரி ஆய்வுகளையும் மேற்கொள்ளுகிறது.

**44.** முதலமைச்சரின் தனிப்பிரிவுக்கென வலைத்தளம் அறிமுகப்படுத்தப்பட்டது மணிமகுடத்தில் மேலும் மாணிக்கக்கல் பதிந்தது போலாகும். இந்த வலைத்தளத்திற்கு பொதுமக்களிடமிருந்து பெருத்த வரவேற்பு கிடைத்துள்ளது. இதுவரையில், சுமார் **80,000** மனுக்கள் வலைதளத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன. இவற்றுள் **90** விழுக்காடு மனுக்களுக்கு தீர்வு காணப்பட்டுள்ளன. இந்த வலைத்தளம் வாயிலாக மேற்கொள்ளப்பட்ட பணிகள் குறித்து பெறப்பட்ட தகவல்கள் தொடர்ந்து ஆய்வு செய்யப்பட்டு செயல்பாட்டு தரம் உயர்த்தப்படுகிறது.

**45.** புகார்களுக்கு பதிலளிக்கின்ற கால அளவையும், தீர்வின் தரம் ஆகியவற்றை மேம்படுத்த அதிகாரிகளை ஊக்குவிக்கும் ஒரு

நடவடிக்கையாக, சிறப்பாக செயல்புரிபவர்களுக்கு விருதுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இந்த விருதுகள், மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் காவல் துறை அதிகாரிகள் மாநாட்டின் போது, துறைத்தலைவர்கள், மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் காவல் துறை அதிகாரிகளுக்கு வழங்கப்படுகின்றன.

**2014–2015–ஆம் ஆண்டிற்கான புதிய திட்டங்கள் – (பகுதி–II)**
**(தொகுதி – I)**

| வரிசை எண். | அலுவலகத்தின் பெயர் | மொத்தம் (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | தமிழ்நாடு இல்லம், புதுடெல்லி | 38.44 |
| 2. | முன்னாள் படைவீரர்கள் நல இயக்ககம் | 11.56 |
| | **மொத்தம்** | **50.00** |

**2014–2015–ஆம் ஆண்டிற்கான புதிய திட்டங்கள் – (பகுதி–II)**
**(தொகுதி – II)**

| வரிசை எண். | அலுவலகத்தின் பெயர் | மொத்தம் (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | அரசு விருந்தினர் இல்லம், சேப்பாக்கம், சென்னை–5. | 53.27 |
| 2. | தமிழகம் விருந்தினர் இல்லம் – உதகமண்டலம் | 98.33 |
| 3. | தமிழ்நாடு இல்லம், புதுடெல்லி | 47.50 |
| 4. | மைய ஆவண பிரிவு நவீனப்படுத்தல் பொதுத்துறை | 50.00 |
| | **மொத்தம்** | **249.10** |

ஜெ ஜெயலலிதா
முதலமைச்சர்